1981 ஏப்ரல் 25]

திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறார்கள். வந்துபோகின்ற பயணிகளுக்கு ஏற்ப அமைகின்ற திட்டம், அதற்காக கொடுத்திருக்கிறோம், அதற்காக மாற்று இடம் அவர்கள் கொடுக்கவில்லை. அதற்காகப் பணம் பெற்றுக்கொண்டோம்.

தர்மபுரியில் குழந்தைகள் கலையரங்கம் கட்டும் திட்டம்

*வினா எண். 879—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி நகரில் குழந்தைகள் கலையரங்கம் ஒன்று கட்டும் செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தர்மபுரி நகரத்திலே குழந்தைகள் கலையரங்கம் வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டு வளர்ச்சிக் குழுவிலேயும் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்வதாக ஏற்கெனவே சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, அதனைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து கலை யரங்கம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தற்பொழுது பரிசீலனையிலே இல்லை ; பின்னாலே எடுத்துக்கொள்ளலாம்.

நாப்பாளையத்தில் மேம்பாலம் கட்டும் பணி

*வினா எண். 880—திரு. ஆர். சக்கரபாணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பொன்னேரி தொகுதி மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நாப்பாளையம் (பொன்னேரி நெடுஞ்சாலை) மேம்பாலம் பணி எப்போது துவக்கப்பட்டது?

(ஆ) அம்மேம்பால வேலை பாதி தூண்கள் வரை கட்டப்பட்டு நிற்பதற்கான காரணம் என்ன?

(இ) அது எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 8—12—1975.

[1981 ஏப்ரல் 25

(ஆ) மற்றும் (இ) பாலம் கட்டும் பணியினை தாமதப்படுத்தியதால் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, ஒப்பந்தக்காரர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு 18—6—1981-க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள பணிகளை சிறு பணி ஒப்பந்தக் காரர்கள் மூலம் துறை வாயிலாகவே முடித்து விட தீர்மானிக்கப்பட்டு அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஆர். சக்கரபாணி : மாண்புமிகு தலைவரவர்களே, அரசே எடுத்து நடத்தும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது எப்பொழுது முடிக்கப்படும் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஒப்பந்தக்காரர் வழக்குமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். 18—6—1981-க்கு அந்த வழக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. ஆனாலும் சிறு பணிகளையெல்லாம் எவ்வளவு சீக்கிரமாக முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் சிறு பணி ஒப்பந்தக் காரர்கள் மூலமாக முடிக்க நடவடிக்கை எடுத்து அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மிகச் சீக்கிரமாக அந்தப் பாலவேலைகள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 881—டாக்டர் கே. சமரசம் மற்றும் திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் (தென் பெண்ணை ஆற்றில்) கட்ட பல்லாண்டுகளாக திட்டமிட்டும் கட்டப்படாமல் இருப்பதன் காரணமென்ன ?

(ஆ) அந்தப் பாலம் கட்ட அரசு உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இப்பாலத்திற்குத் தேவைப் படும் ரூ. 50 இலட்சத்தை ஒரு மொத்தமாக ஒதுக்க நிதி நிலைமை இடம் தராத காரணத்தால், இப்பணி மேற்கொள்ளப்படாமல் உள்ளது.

(ஆ) நிதி நிலைமை மேம்படும் சமயம் இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள அரசு ஆவன செய்யும்.